# குமாரத்தத்துவத்தின் யதார்த்தம்

தனிப்பட்ட வாழ்க்கையில் வார்த்தை செயல்பாடு
மற்றும் கிறிஸ்துவில் புதிய சிருஷ்டிப்பு

# THE REALITY OF SONSHIP

by Michael Shattuck

**Michael Shattuck** is a co-loborer with the Holy Spirit with a base at Celebration City, gathering in Portkland, Oregon.

E-mail : celebration.mission@gmail.com
Website : www.celebrationcity.net

---

+91 98845 97099
sathishgedion@gmail.com

Printed in the India All Rights Reserved
Published by : Tabarnacle Church

## அனைத்து வேத குறிப்புகளும் கிங் ஜேம்ஸ் வசனத்திலிருந்து எடுக்கப்பட்டவை

உபயோகிக்கும் முறைகள் :

1. தினமும் வாசிப்பது
2. எல்லா சூழ்நிலைகளிலும் உங்கள் ஆவி ஆத்தும சரீரம் மூலமாக இவ்வசனங்களை தியானியுங்கள்.
3. இவ்வகை தியான முறையை பயன்படுத்துங்கள் அமைதியாக உட்கார்ந்தோ படுத்துக் கொண்டோ இவ்வார்த்தையை உரக்கப் பேசுங்கள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து செய்யவும்.
4. இப்படி பயன்படுத்தும் போது உத்தரவாத முடிவுகள் உண்டாகும்.

தேவன் சிருஷ்டிகர், இயேசு கிறிஸ்துவின் உருவத்தில் பூமிக்கு வந்த போது உலகத்தால் அங்கீகரிக்கப் படவில்லை அல்லது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர் சொந்த ஜனமான இஸ்ரவேல் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவரை விசுவாசிப்பவர்களுக்கு சொந்த குமாரனும் குமாரத்திகளாக ஆகும்படியாக விலைமதிப்பற்ற பாக்கியத்தை அளித்தார். இந்த புதிய வாழ்வு பிறப்பு மனிதனின் சக்தியினாலோ, பெலத்தாலோ, திறமையினாலோ, செயலினாலோ உண்டாகவில்லை. மாறாக, தேவனின் விருப்பத்தினாலும், அன்பினாலும் ஏற்படுத்தப்பட்டது. இந்த (குமாரத்துவம்) (Son Ship) அவர்

சித்தத்தினாலே கிடைத்தது இந்த மாபெரும் பாக்கியம்.

நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன், நான் விழிக்கும் போது உமது சாயலினால் திருப்தியடைவேன். (சங். 17:15)

## நான் கிறிஸ்த்துவுடன் சிலுவையில் அறையப்பட்டேன். (கலா.2:20)

நான் கிறிஸ்த்துவுடன் சிலுவையில் அறையப்பட்டேன் என் பழைய மனுஷன் (சுயம்) சிலுவையில் அறையப்பட்டது கிறிஸ்து என் பழைய மனுஷனை சிலுவையில் ஏற்றினார். நான் அன்றே மரித்தேன். சிலுவை என்பது என் பழைய மனுஷனை அகற்றுவதற்கான தேவனின் வழியாகும். அவருடன் நானும் சிலுவையில் அறையப்பட்டேன். அவர் வாழ்கிறார் நானும் வாழ்கிறேன். ஆயினும் நான் பழைய மனிதன் அல்ல. என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே நான் அவரை நம்பும் விசுவாசத்தில் நடக்கிறேன். என் பார்வையால் அல்ல. இந்த வாழ்வை அவரை விசுவாசிப்பதால் நிர்வாகிக்கிறேன். தேவனின் வார்த்தை நான் யார் என்று கூறுகிறது மற்றும் கிறிஸ்துவுக்குள் எனக்கு என்ன இருக்கிறது என்றும் அவர் அறிவிக்கிறார்.

### கலாத்தியர் 6:14

நான் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டேன். அவருடைய சிலுவையில் நானும் உலகத்துக்குள் அறையப்பட்டேன். உலகம் எனக்குள் சிலுவையில்

அறையப்பட்டது. நான் உலகில் இல்லை, உலகம் என் மேல் எந்த விதமான மாயமான அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. அவமானம் நிந்தை உடைய சிலுவை இந்த உலகின் கவர்ச்சி மற்றும் வஞ்சத்திலிருந்து நம்மை முற்றிலும் பிரிக்கப்படுவதை காட்டுகிறது. நான் கிறிஸ்துவுக்குள் சிலுவையில் அறையப்பட்டேன்.

## ரோமர் 6:6

என் பழைய சுய வாழ்வும் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டது. என் பழைய சுபாவங்கள் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டது. என் பழைய மனுஷன் அவருடன் சிலுவையில் அறையப்பட்டான். இப்பொழுது எனக்குள் புதிய சுயம், புதிய ஜீவன், புதிய பிறப்பு, என் பாவ குணம் அழிந்து விட்டது. நான் இனி பாவத்தின் கருவி இல்லை. என் சரீரம் பாவத்தின் அடிமை இல்லை. பாவத்தின் வல்லமை உடைக்கப்பட்டது. என் சரீரம் தீமைக்கான செயல் இழந்து நிற்கிறது. என் சுயம் சுபாவ இயல்பு கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டது. என் பழைய பெயர் கிறிஸ்த்துவுடன் அறையப்பட்டது.

## நான் கிறிஸ்துவுக்குள் மரித்தேன் ரோமர் 6:8

அவருடன் பழையது ஒழிந்தது அவரின் மரணத்தில் நானும் பங்கு கொண்டேன். அவருடைய மரணம் என்னுடைய மரணம். என்னுடைய பழைய சுபாவங்கள் அவருடன் மரித்துவிட்டது. நான் உலகத்தின், பாவத்திற்கும், நோய்களுக்கும் அவருடன் மரித்து

விட்டேன். நான் அவருடைய வாழ்வை பகிர்ந்து கொள்கிறேன்.

## நான் இயேசுவோடு மரித்தேன் கொலோசியர் 2:20

நான் கிறிஸ்த்துவுடன் மரித்தேன். இந்த உலகம் பார்க்கும் விதமாய் நான் அவருக்குள் மரித்தேன். இவ்வுலகம் பார்க்கும் காரியங்களுக்கும், விஷயங்களுக்கும் நான் அவருடன் மரித்தேன். உலக கொள்கைகளுக்கும் மரித்தேன். நான் உலகத்தின் ஆதிக்கத்தில் இல்லை கட்டுப்பாட்டுடன் இல்லை. அவர் எனக்காக சுமந்த நியாய பிரமாணத்தின் சாபத்திற்கு நான் அவருடன் மரித்தேன். நான் பாவம், நோய், ஏழ்மை, தரித்திரம், பயம் போன்றவற்றிற்கும் மரித்தேன்.

### கொலோசியர் 3:3

நான் மரித்தேன் என் ஜீவன் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது. நான் கிறிஸ்த்துவுடன் இவ்வுலகத்திற்கும் இவ்வுலக வாழ்க்கைக்கும், பொருளுக்கும், உலக செயல்களுக்கும் மரித்தேன். என் உலக ஆசை, விருப்பம் எல்லாம் கிறிஸ்த்துவுடன் மரித்துவிட்டது. என் உண்மை வாழ்வு என் உண்மை சுயம் இப்பொழுது மறைந்து இருக்கிறது. நான் கிறிஸ்துவுடன் தேவனுடைய ரகசிய வாழ்க்கைக்குள் நுழைந்திருக்கிறேன். என்னுடைய புதிய சுயம் கிறிஸ்துவுடன் தேவனுக்குள் நான் இருக்கிறேன். மனிதர்களின் பார்வையில் மறைந்திருக்கிறேன்.

## ரோமர் 6:10;11

கிறிஸ்து மரித்த அனைத்திற்கும் நானும் மரித்தேன். எப்படி கிறிஸ்து ஒரு முறை மரித்து பாவத்தின் கோளத்திலிருந்து வெளியேறினாரோ அதேபோல் நானும் அவ்வாறே பாவத்திற்கு மரித்ததாக கருதுகிறேன். நான் என்னை கருதுகிறேன், நான் என்னை பார்க்கிறேன். நான் என்னை பற்றி நினைக்கிறேன் நான் உண்மையில் பாவத்தின் வல்லமைக்கு மரித்துவிட்டதாக பார்க்கிறேன். இயேசு பாவத்திற்காகவும், நோய்களுக்காகவும் மரித்தார். நான் அவருடன் மரித்தால் நானும் பாவத்திற்கும், நோய்களுக்கும் மரித்தேன். பாவத்தின் ஆதிக்கத்திற்கு நானும் அவருடன் மரித்தேன். நான் கடவுளுக்குள் உயிருடன் இருக்கிறேன். எனக்குள் அவர் ஜீவன் இருக்கிறது. என் ஜீவன் கிறிஸ்த்துவுக்குள் உள் வாங்கப்பட்டது. கிறிஸ்துவோடு இணைந்து நான் தேவனுக்கு சேவை செய்ய என்னை முழுமையாகி ஜீவனோடு இருக்கிறேன். நான் நீதிக்கு பிழைத்திருக்கிறேன். நான் பெலத்துடன் ஜீவனோடு இருக்கிறேன்.

## நான் கிறிஸ்துவுடன் அடக்கம் செய்யப்பட்டேன்.

## ரோமர் 6:4;5

என் பழைய மனிதன் கிறிஸ்த்துவுடன் அடக்கம் செய்யப்பட்டார். என் நோய்களும், அடிமைத்தனங்களும் அவருடன் கல்லறையில் முத்திரை போடப்பட்டது. அவர் பிதாவின் மகிமையால் உயிரோடு எழுப்பப்பட்டது. அந்த

புதிய அற்புத வாழ்வை சுதந்தரித்து கொள்ள இப்பொழுது முன்னேறுகிறேன். அந்த ஜீவன் என்னுடன் இருக்கிறது. அது என்னை கட்டுபடுத்துகிறது. நான் ஒரு புதிய உலகத்திற்குள் நகர்கிறேன், வாழ்கிறேன். அந்த வாழ்க்கை அவருடைய சொந்த உயிர்தெழுதல் வாழ்க்கை எனக்குள் இருக்கிறது. சாத்தானையும் அவன் இடமாகிய நரகத்தையும் வெல்ல அவருக்கு உதவிய வாழ்க்கை இப்பொழுது எனக்குள் இருக்கிறது. பாவம், வியாதி, வறுமை மற்றும் அடிமைத்தனம் உட்பட அவர் எனக்காக சுமந்து எல்லாவற்றிலிருந்தும் நான் விடுவிக்கப் பட்டிருக்கிறேன். நான் மரித்து அவருடன் அடக்கம் செய்யப்பட்டு அவருடைய ஒரு பாகம் ஆகிறேன். நான் அவருடன் உயிரோடு எழுப்பப்பட்டேன். நான் அவருடைய புதிய உயிர்த்தெழுதல் வாழ்வில் நானும் இணைக்கப் பட்டிருக்கிறேன்.

## கொலோசியர் 2:12

தண்ணீர் முழுக்கு ஞானஸ்த்தானம் அவருடைய அடக்கம் உயிர்தெழுதலை அடையாளப்படுத்துகிறது. நான் அவருடன் அடக்கம் செய்யப்பட்டேன். நான் அவருடன் உயிரோடு எழுப்பப்பட்டேன். என் முந்தின விஷயங்கள் அவரோடு அடக்கம் பண்ணைப்பட்டு என் அடிமைத்தனம் தோல்விகள் அவருடன் அடக்கம் செய்யப்பட்டு, இப்பொழுது வெற்றியின் உயிர்தெழுதலின் வாழ்வு எனக்குள் இருக்கிறது. அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையிலும், வாழ்விலும் எனக்கு பங்கு இருக்கிறது.

## நான் கிறிஸ்துவுடன் உயிர்பிக்கப்பட்டேன் கொலோசியர் 2:13

நான் கிறிஸ்த்துவுடன் உயிர்பிக்கப்பட்டேன். பிதா எங்களை அவ்வாறாக வாழ எங்களை உயிரோடு இணைத்ததால் அவர் எங்களை துரிதப்படுத்தினார். அவருடைய உயிர்த்தெழுதலின் வாழ்க்கை இப்பொழுது எனக்குள் இருக்கிறது. அவரின் நிறைவான வாழ்க்கையில் நான் நிரப்பப்பட்டிருக்கிறேன்.

## எபேசியர் 2:5

நான் என் வாழ்வை அவரிடத்தில் ஒப்பு கொடுத்ததால் நான் கிறிஸ்துவுக்குள் அடையாளப்படுத்தப்பட்டேன் தேவன் எனக்கு வாழ்வளித்தார். தேவன் நான் கிறிஸ்துவுக்குள் மரித்ததையும் அடக்கம் பண்ணப்பட்டதையும், உயிரோடு எழுந்ததையும் கண்டார். அந்த நாளில் புது ஜீவ சுவாசத்தை நான் இப்பொழுது சுவாசிக்கிறேன். தேவன் கிறிஸ்துவுக்குள் தந்த அந்த புது வாழ்வு எப்படி இயேசு அதிகார லோகத்தின் வல்லமையை அவர் எடுத்து பாதளத்தின் மேல் அதிகாரம் செலுத்துகிறதோ அந்த வாழ்வு எனக்குள் வந்திருக்கிறது.

## நான் அவருடன் வெற்றி பெற்றேன். கொலேசியர் 2:15

நான் அவருடன் அடையாளம் காணப்பட்டதால் அவர் வெற்றி என்னுடைய வெற்றி. அவர் வல்லமைகளையும், அதிகாரங்களையும் அவர் எனக்குள் வென்றதால்

அவருடைய வெற்றி என் வெற்றி. அவர் வெற்றியில் நானும் பங்கு கொள்கிறேன். என்னை பொறுத்த வரை சாத்தான் தோற்கடிக்கப்பட்ட எதிரி. கிறிஸ்த்துவின் வெற்றி என் வெற்றி என் மீது உள்ள சாத்தானின் ஆதிக்கம் ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

## எபிரேயர் 2:14

கிறிஸ்துவின் வெற்றியால் சாத்தான் பலம் இழந்தவனானான். என்னை பொறுத்த வரையில் அவன் பதவி நீக்கப்பட்டான், தோற்கடிக்கப்பட்டான். வீணாக்கப்பட்டதால் எந்த பயனும் இல்லாமல் தூக்கி எறியபட்டான், நடுநிலையாக்கப்பட்டான், முடக்கப்பட்டான் நசுக்கப்பட்ான் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டான் கிறிஸ்துவுடனே நானும் வெற்றி பெற்றேன். கிறிஸ்துவின் வெற்றி என் வெற்றி என்னென்றால் நான் உயிரோடு எழுப்பபட்டிருக்கிறேன்.

## நான் அவருக்குள் எழுப்பப்பட்டேன் கொலோசியர் 3:1

பிதாவின் வலது பாரிசத்தில் கிறிஸ்து அமர்ந்திருக்க, மேலே உள்ள விஷயங்கள் அனுபவிக்க நான் கிறிஸ்துவுடன் எழுப்பபட்டிருக்கிறேன். அந்த பரலோக்க உலகின் வளமான நித்திய பொக்கிஷங்களை கைப்பற்றி அனுபவிக்க, அவைகள் எல்லாம் என்னுடையவைகள் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய காரியங்கள் அனைத்தும் என்னுடையவைகள். நான் கிறிஸ்துவுடன்

எழுப்பப்பட்டேன் அவருடைய மகிமையான உயிர் தெழுதலால் நானும் பங்கு கொள்கிறேன்.

**எபேசியர் 1:19; 21**

கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே வல்லமை என்னில் செயல்படுகிறது. அவருடைய உயிர்த்தெழுதலின் சக்தி மிகப் பெரியது, அளவிட முடியாது எல்லையற்றது. எதிர்பற்றது. கம்பிரமானது மற்றும் மிகப்பெரிய வலிமை வாய்ந்தது.

நான் கிறிஸ்த்துவுடன் உயிர்த்தெழுப்பபட்டதால் அவரின் உயிர்தெழுதலின் வல்லமை எனக்குள் கிரியை செய்கிறது. அவர் உயிர்த்தெழுதலின் நன்மைகளை நான் பகிர்ந்து கொண்டேன் நான் கிறிஸ்துவுடன் எழுப்பப்பட்டேன்.

## நான் கிறிஸ்துவுடன் அமர்ந்திருக்கிறேன்.

**எபேசியர் 1:19–21; 2:6 லூக்கா 10:19**

நான் கிறிஸ்துவுடன் எழுப்பப்பட்டேன். மனிதனின் எல்லா எதிரிகளையும் வெற்றியடைய செய்த அதே வலிமையான பெலன் என்னையும் உயர்த்தியது. நான் அவருடன் அமர்ந்திருக்கிறேன். பரலோகத்தில் அவருடன் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறேன். அவருடைய சிம்மாசனத்தில் அவருடைய அதிகாரத்தை நானும் பகிர்ந்து கொள்கிறேன். பாவம், வறுமை, வியாதி, பிசாசுகள் மற்றும் எல்லா சூழ்நிலைகள் மேலும் நான் அவருடன் ஆட்சி செய்கிறேன். நான் அவருடன் ஆட்சி

செய்வதால் அவர் காலடியில் உள்ள அனைத்தும் என் காலடியில் உள்ளன. எல்லா அதிபதிகளும் அதிகாரங்களும் அசுர சக்திகளும். என் காலடியில் உள்ளன நோயும், வறுமையும் என் காலடியில் உள்ளன. சாத்தான் என் காலடியில் உள்ளான். பாம்புகளையும், தேள்களையும் மிதிக்கும் அதிகாரம் எனக்கு உண்டு. எதிரிகளின் அனைத்து அதிகாரத்தின் மீதும் எனக்கு அதிகாரம் உள்ளது.

## நித்திய ஜீவன் : இயேசுவின் வருகைக்கான காரணம் மற்றும் மீட்பு திட்டத்தில் முதன்மைப் பொருள்.

**யோவான் 6:33 10:10**

**I யோவான் 1:1,2 4:9**

ஜீவன் இயேசுவில் வெளிப்பட்டது. அவர் ஜீவன் அளிப்பவர். பிதா குமாரனை அனுப்பிய நோக்கம் எனக்கு ஜீவன் அளிப்பதற்காக. இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். நித்திய ஜீவன் என்பது தேவ வாழ்வுக்கு நிகர்ரானது.

இறங்கி வந்த நித்திய ஜீவன் என்பது தேவ வாழ்வுக்கு நிகர்ரானது. எனக்கு அந்த வாழ்க்கை இருக்கிறது.

**ரோமர் 5:18;21**

ஆதாமின் பாவம் உலகத்திற்கு ஆவிக்குரிய மரணத்தை கொண்டு வந்தது. ஆனால் கிறிஸ்துவின் நீதியானது, நித்திய ஜீவனுக்கான கதவை திறந்தது. கிறிஸ்துவுகுள்ளான தேவனின் சித்தம் என்னை நீதிமானாக்கி ஜீவன் அளிப்பது. கிறிஸ்துவின் விடுவிக்கும் செயல் என்னை விடுதலையாக்கி புதுவாழ்வு அளிக்கிறது. என்னை தேவனோடு பொருந்த செய்தது. நித்திய ஜீவன் என் பங்கானது. தேவனின் நித்திய ஜீவன் என் பங்கானது. தேவனின் நித்திய ஜீவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்த்துவுக்குள் எனதானது.

**யோவான் 3:14;16 6:51**

**I தெசலோனிக்கேயர் 5:10**

இயேசு தம்முடைய இரத்தத்தைச் சிந்தி எனக்காக மரித்ததற்குக் காரணம் எனக்கு ஜீவன் கொடுப்பதற்காக தான் என் பாவத்திற்கான தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார். நான் இப்பொழுது நீதிமான் ஆக்கப்பட்டேன். ஜீவன் பெற்றேன். பிதா எனக்கு பரலோகத்திலிருந்து ஜீவனை அனுப்பினார். அந்த ஜீவன் இப்பொழுது எனக்குள் இருக்கிறது. பரத்திற்கு நிகரான ஜீவன் தேவ வாழ்விற்கு நிகரான ஜீவன் எனக்கு இருக்கிறது.

## நித்திய ஜீவ வாழ்வு என்பது தேவ சுபாவ வாழ்வு

**யோவான் 1:4 5:26**

தேவ ஆவிக்குள் ஜீவன் இருக்கிறது.அந்த சக்தியே நித்திய ஜீவன். இயேசுவும் அதே வகையான ஜீவன் பெற்றிருந்தார். அவருக்கும் எனக்கும் ஒரே ஆவி ஒரே மாதிரியான வாழ்வு என்பதை என் உள்ளத்தில் பெற்று இருக்கிறேன். நான் தேவனால் பிறந்து இருக்கிறேன் என்பது சுயமாகி இருக்கும் நான் என்பதில் உள்ளது.

**எபேசியர் 4:17–18 1பேதுரு 1:4**

நித்திய ஜீவன் தேவனுடைய ஜீவன். அது தெய்வீகமானது அது தேவன் இயேசு கொண்டது. எனக்குள் தேவனின் வாழ்வு, தேவனின் சுபாவம் கொண்டிருக்கிறது. நான் தெய்வீக சுபாவத்திற்கு பங்குதாரர். என் ஆன்மா மரணத்திலிருந்து தப்பித்து விட்டது, உலகத்தின் பாவத்தின் மூலம், தேவனின் சொந்த ஜீவன் எனக்குள் இருக்கிறது. அவர் ஜீவன் எனக்குள் இருப்பதால் நான் அவருடைய ஆள் தத்துவத்தில் பங்கு கொள்ள வந்திருக்கிறேன்.

## எனக்குள் நித்திய ஜீவன் இருக்கிறது.
## யோவான் 3:3-6

நானும் இயேசுவும் ஆவியில் ஒன்றாய் இருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் என் ஆத்துமாவை அவருடைய ஆத்துமாவாக மாற்றுகிறார். மேலும் என் சரிரம் அவர் சரிரமாக மாறுகிறது. விலையேறப் பெற்ற சரிரம்

இயேசுவின் மூலமாய் பிறந்து இருக்கிறது. நான் தேவனை அப்பா என்று மீண்டும் அழைக்கும் கிருபை பெற்றேன். நான் பரலோகத்திலிருந்து புதியதாய் பிறந்து இருக்கிறேன். பரலோக வாழ்வு எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நான் தேவனின் ஜீவனையும் சுபாவத்தையும் பெற்று இருக்கிறேன். நான் தேவ வாழ்வு மற்றும் தேவ தன்மையுடன் நான் பிதாவின் குடும்பத்தில் இருக்கிறேன்.

## எபிரெயர் 12:9

பிதாவில் இருக்கும் ஜீவன் எனக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தேவன் எனக்கு தந்தை, நானும் தேவனின் பிள்ளையாக இருக்கிறேன். பிதா என் தந்தை நான் அவருடைய மகன் எனக்குள் அவர் சுபாவம் இருக்கிறது.

## I பேதுரு 1:23

எனது மறு பிறப்பு, தேவன் தம் வார்த்தையால் வழங்கிய புதிய பிறப்பு அவருடைய ஜீவனில் நான் நிறைந்திருப்பதால். தேவ வார்த்தை என்னில் ஆன்மாவில் சேகரிக்கப்பட்டுள்ளது. நான் தேவனின் ஜீவன் கொண்டு தேவ வார்த்தையாய் தேவனால் பிறந்து இருக்கிறேன்.

தேவனின் ஜீவன் சுபாவம் என்னிடம் உள்ளது. நான் மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டேன். ஜீவனுள்ள அழியாத வார்த்தையிலிருந்து என் ஆவியில் புதிதாக பிறந்தேன்

நான் அவரின் குமாரன்.

தேவனின் அழிக்க முடியாத புத்திர சந்தானத்தை எனக்கு அளித்திருக்கிறார் என்றும் அழியாத வார்த்தையால் நான் பிதா மூலம் வாழும் தேவ மைந்தன் ஆகிவிட்டேன்.

**எபேசியர் 2:1; யோவான் 5:24**

நான் அக்கிரமங்களுக்குள் பாவங்களுக்குள் மரித்தேன் மரணம் என்னை ஆட்கொண்டது ஆனால் தேவன் என்னை வாழ வைத்தார். நான் ஏற்கெனவே மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்து விட்டேன். நான் இபபொழுது நித்திய வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். நான் மரணத்திலிருந்து ஜீவனுக்கான எல்லையை தாண்டி விட்டேன். நான் மரணப் பட்டிருக்கிறேன்.

**ரோமர் 8:2;10**

நான் ஜீவனால் நிறைந்திருக்கிறேன். நான் ஜீவ வாழ்வை அனுபவித்து வருகிறேன். தேவனுடைய ஜீவன் பரலோகத்தின் ஜீவன் கிறிஸ்துவில் இருக்கும் ஜீவன். இப்பொழுது என் மேல் இருக்கிறது. அந்த ஜீவன் என்னை பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுவித்தது. பழைய சுபாவம் நீங்கி புதிய சுபாவமாக என்னை மாற்றியது.

இயேசு எனக்குள் இருந்து பழைய நியாயப்பிரமான பழைய கோட்பாடு பழைய நிலை, பாவம் மற்றும் மரணத்தின் பழைய சுபாவம் ஆகியவற்றை எனக்குள் மாற்றியிருக்கிறார். தேவ நீதி தேவ வாழ்வு உண்மையில்

எனக்கு வழங்குப்பட்டிருகிறது. தேவனின் ஜீவன் என்னுள் ஊதப்பட்டது. நான் ஒரு புதிய சிருஷ்டி.

## நித்திய ஜீவன் எப்படி கொடுக்கப்பட்டது.
## II திமேத்தேயு 1:10 எபிரெயர் 2:9,11

இயேசு தம்முடைய சொந்த ஆவியில் அந்த மரணத்தை எனக்காக ருசித்ததின் மூலம் என்னுடைய பழைய சுபாவமான ஆவிக்குரிய மரணத்தை அழித்தார். என் பழைய சுபாவம் துடைத் தெரிந்தார். நான் இப்பொழுது அவருடைய ஜீவனைப் பெற்றிருக்கிறேன். நான் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்து விட்டேன்.

**அப்போஸ்தலர் 2:24; 27;28**

இயேசு எல்லா மரணத்தையும் எனக்கு பதிலாக ஏற்றுக்கொண்டார். என் பாவத்திற்கு எதிரான நீதியின் கோரிக்கைகளை அவர் திருப்திப்படுத்திய பிறகு அவர் ஆவியல் மீண்டும் உயிர் பிக்கப்பட்டார். என்னுடைய பழைய சுபாவம். ஆவிக்குறிய மரணம் அழிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் எனக்கு ஜீவன் கொடுக்கப்பட்டது. தேவன் எனக்கு கிறிஸ்துவுக்குள் ஜீவனை கொடுத்தார். என் மரணத்தை ஏற்றுக்கொண்டார்.

என் பாவத்திற்கான தண்டனையை அவர் ஏற்க்கொண்டு எனக்காக ஜீவனை வென்றார். அந்த ஜீவன் இப்பொழுது எனக்குள் இருக்கிறது.

**I பேதுரு 3:18 கொலோசெயர் 1:18**

**வெளிப்படுத்துதல் 1:5 அப்போஸ்தலர் 13:32–34**

இயேசு சரிரப்பிரகாரமாக உயிர்தெழுப்பபடுவதற்கு முன்பாக ஆவியால் உயிர்ப்பிக்கப்பட்டார். தேவன் அவரது ஆவியில் வாழ்வு கொடுத்தார்

புதுவாழ்விற்கு மீண்டும் பிறந்தவர் அவர் எனக்காக மரணத்தை சுவைத்தவர். அவர் எனக்காக அவர் மீண்டும் உயிர்பிக்கப்பட்டார். அவர் எனக்காக பாடுபட்டார். அவர் என்னை பிரதிநிதித்துவப்படுத்தினார். தேவன் நித்திய ஜீவனை தம்முடைய மகனுக்கு கொடுத்த போது என் கணக்கில் வரவுக்கு வைத்தார். ஒரு மனிதன் உயிருடன் இருப்பது போல் இருந்தது. அவர் என்னுடைய பழைய சுபாவங்களை சுமந்தார் (ஆண்மீக மரணம்) நீதியின் சட்டங்களை திருப்திபடுத்தி. அவர் என் பாவத்திற்கான தண்டனையை அனுபவித்தார் அதனால் நான் நீதிமானாய் மாற்றப்பட்டு நித்திய ஜீவனைப் பெற முடியும். அவர் எனக்கான பழைய வாழ்வு ஏற்றுக்கொண்டு. அவருக்கு வழங்கப்பட்ட புதுவாழ்வு இப்பொழுது எனக்குள் வாழ்கிறது.

**கொலோசெயர் 2:15 வெளிப்படுத்தல் 1:18**

**ரோமர் 8:37–39**

நரகத்தையும் பிசாசையும் வெல்பவர் எனக்குள் இருக்கிறார். அவரின் உயிர்தெழுந்து வெற்றிகரமான வாழ்வுக்கு நானும் பங்கு உள்ளவனானேன். என்னை

எதுவும் தோற்கடிக்க முடியாது என்ற உறுதியான முடிவுக்கு நான் செயல்படுத்தி வந்துள்ளேன். எந்த இருளும், ஆழங்களும், எந்த பிசாசும், எந்த சூழ்நிலைகளும என்னை வெல்ல முடியாது என்பதில் நான் உறுதியாக இருக்கறேன். நரகத்தின் மீது இயேசு வெற்றிபெறச் செய்த வல்லமை அவர் மூலமாக என்னுடையது.

## எபேசியர் 2:5 கொலோசியர் 2:13

கடவுள் இயேசுவையும் என்னையும் ஒன்றாக இணைத்திருக்கிறார். அவர் வெற்றியில் நான் அடையாளம் காணப்பட்டேன். அவர் சாத்தானை வீழ்த்தினார் அவருடைய வெற்றியில் எனக்கும் பங்குவுள்ளது. இயேசுவை நரகத்தின் மேல் அதிகாரியாக்கிய அதே வல்லமையில் நானும் நிறைந்திருக்கிறேன். கிறிஸ்துவுக்குள்ளான அதே புதிய ஜீவனை தேவன் என்னிலும் சுவாசித்து இருக்கிறார்.

அந்த புதிய வாழ்வில் நான் மகிழ்ந்திருக்கிறேன். கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே புதிய வல்லமையை நானும் பகிர்ந்து கொள்ளுகிறேன். அவர் உயிர்தெழுதல் வாழ்வு வல்லமை வெற்றி என்னுடையது.

## ரோமர் 6:4

நான் இயேசுவோடு அடக்கம் பண்ணைப்பட்டேன். நான் இயேசுவோடு பிதாவின் மகிமையால் உயிரோடு எழுப்பபட்டும் இருக்கிறேன். நான் அவர் வாழ்வை

சுதந்தரித்து கொண்டேன். இந்த புதிய சுபாவம் எனக்குள் இருக்கும் புதிய வாழ்வு வல்லமை மூலம் புதிய வாழ்க்கை வாழ்கிறேன், முன்னேறுகிறேன் என் நடத்தைகளை ஒழுங்கு படுத்துகிறேன். கிறிஸ்துவின் உயிர்தெழுதல் வாழ்வு எனக்குள் இருக்கிறது. அற்புத வாழ்வு எனக்களித்திருக்கிறார் நான் புனித வாழ்வை சுதந்தரித்துக் கொண்டேன். அந்த வாழ்வு ஆவி ஆத்துமா சரிதம் என்பவைகளை ஆட்சி செய்கிறது.

## ரோமர் 6:5

நான் கிறிஸ்துவின் உயிர்தெழுதலில் இணைக்கப் பட்டிருக்கிறேன். அவர் உயிர்தெழுதலில் நான் பங்கு கொள்கிறேன். நான் அவரின் பங்கு ஆகிவிட்டேன். அவருடன் மரித்ததால் அப்படி ஆகினேன நான் அவரின் மரித்தலிலும் உயிர்தலிலும் பங்கு பெற்றதால் அவரின் சுபாவத்தை தரித்துக் கொண்டேன். அவர் உயிர்தெழுதல் புது வாழ்வை எனக்கு அருளியது அது எனக்குள் இருக்கிறது. பல கனிகளை தரும் அவருடைய உயிர் த்தெழுந்து வாழ்வின் தோட்டத்தில் நான் அவருடன் நடப்பட்டிருக்கிறேன்.

## ரோமர் 6:8

நான், என் பழைய சுயம் கிறிஸ்துவுடன் மரித்தது. இப்போழுது அவருடைய புதிய ஜீவனை எனது புதிய ஆன்மீக சுயத்தில் பகிர்ந்து கொள்கிறேன். அவர் ஆவியில் உயிர்பிக்கப் பட்ட போது அவர் பெற்ற புதிய வாழ்க்கையுடன், நான் உயிரோடு இருக்கிறேன். நான்

கிறிஸ்துவின் உயிர்தெழுதல் வாழ்வில் பகிர்ந்து கொள்கிறேன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவர் நரகத்தின் அதிபதியாக்கிய வாழ்வு அவரால் என்னுடையது.

## ரோமர் 6:10;11

கிறிஸ்துவுடன் நான் மரித்ததின் மூலம் நான் பாவம், நோய் மற்றம் சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து வெளியேறினேன். அவர் இறந்து அனைத்திற்க்கும் நான் மரித்தேன் அவர் உயிர்த்த அனைத்திற்கும் நான் உயிர்த்தேன் ஏனென்றால் அவர் ஜீவன் எனக்குள் இருக்கிறது. நான் தேவனால் அவருக்குள் ஜீவனோடு இருக்கிறேன் அவருடைய ஜீவனில் என் ஜீவன் மறைந்திருக்கிறது கிறிஸ்துவின் உயிர்தெழுதலினால் பாவம் மரணம் சாத்தானின் அதிகாரங்கள் எல்லாவற்றையும் வென்றார். அவைகள் இப்பொழுது என்னுடையது.

## என் ஆன்மாவின் பசிக்கு நித்திய ஜீவன் திருப்தி அளிக்கிறது

## யோவான் 4:14

எனக்குள் நித்திய ஜீவன் நிறைந்த கிணறு இருக்கிறது, நித்திய ஜீவ ஊற்று அதில் இருக்கிறது. பரலோக வாழ்வு எனக்குள் துளிர்விட்டு என் இயல்புக்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. இது உண்மையான என் தாகத்தை தணிக்கிறது. இது என் உள் ஏக்கங்களை

பூர்த்தி செய்கிறது. ஏனென்றால் தேவனின் ஜீவன், தேவனுக்குள் இருப்பதெல்லாம் அந்த வாழ்வில் இருக்கிறது. தேவனே என் ஆத்துமாவை திருப்தி செய்கிறார். என் உள் உணர்வுகள் நிரப்பப்பட்டு நிரம்பி வழிகிறது அவருடைய ஜீவனால்.

## யோவான் 6:35

என் கர்த்தராகிய இயேசு ஜீவ அப்பம். அவர் எனக்காக இருக்கிறார். எனக்கு ஜீவன் உண்டு அந்த ஜீவன் என் ஆத்துமாவின் பசியை போக்குகிறது. அது என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மெய் சிலிர்க்க வைத்து நிரப்புகிறது. அது பரலோகத்திலிருந்து எனக்குள் பாய்ந்து வந்து தொடர்ச்சியான விநியோகம் செய்து பரலோகத்தின் ஆசிர்வாதங்கள், மகிழ்ச்சி, திருப்தியை தருகிறது. நான் என் தேவனுக்குள் அதிக அதிகமாய் நிரப்பப்படுவதை மிகைப்படுத்துகிறது.

## யோவான் 7:38

எனக்குள் இருந்து ஜீவன் தரும் ஜீவ ஊற்று பாய்கிறது. என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஜீவ தண்ணீர் பாய்கிறது. நீர் பெறுக்கெடுத்து என் ஆன்மாவிலிருந்து வெளியேறி என் வயிற்றிலிருந்து ஜீவ நீரோடைகள் ஓடுகிறது.

## வெளிப்படுத்துதல் 21:6 22:1;17

ஜீவ தண்ணீரை நான் தாராளமாகி குடிக்க முடியும் நான் சிங்காசனத்திலிருந்து பாயும் தண்ணீரை அழமாக குடிக்கிறேன் தெளிவான, தூய்மையான மற்றும்

படிகத்தைப் போன்ற புத்திசாலித்தனம் போன்ற வாழ்வு எனக்குள் ஊற்றுகிறது. இது பரலோகத்தின் யதார்த்தத்தை கொண்டு வருகிறது. அது என்னை உற்சாகப்படுத்துகிறது. வெளிப்படுகிறது. பரலோக வாழ்வு எனக்குள் பாய்ந்து கொண்டே இருக்கிறது. கிருபையின் ஆசிர்வாதத்தையும் மகிழ்ச்சியையும், திருப்தியையும் தருகிறது. நான் பரலோகத்தின் ஆசிர்வாத வாய்கால்

## நித்திய ஜீவன் என்னை சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையாக்கிற்று.

### I யோவான் 3:14; 15 எபிரேயர் 2:14

நான் மரணத்தில் இருந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கிறேன். நான் மரணத்திலிருந்து ஜீவனுக்கு மாற்றபட்டிருக்கிறேன். நான் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பெயர்க்கப்பட்டிருக்கிறேன். நான் சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து வெளியேறி நான் மரணத்தை வென்றிருக்கிறேன். அதனால் சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து வெளியேறி இருக்கிறேன். அவன் வல்லமை இப்பொழுது செயல் இழுந்திருக்கிறது. அவன் திருட்டு தனமான வல்லமை என்னை இழுத்திருக்கிறது. அவன் திருட்டு தனமான வல்லமை என்னை ஒன்றும் செய்ய இயலாமல் போனது. நான் நித்திய ஜீவன் மூலமாக சாத்தானின் அதிகாரத்திலிருந்து விலகியிருக்கிறேன்.

### அப்போஸ்தலர் 26:18

இப்பொழுது இயசே உயிருள்ளவர்க்கும், மரித்தவர்க்கும் அவரே ஆண்டவர் இயேசு ஜீவனுக்கு ஆண்டவராய்

இருக்கிறார். நித்திய ஜீவன் பெற்ற அனைவருக்கும் அவரே ஆண்டவராய் இருக்கிறார். நான் மரணத்திலிருந்து வெளியேறிவிட்டேன் ஜீவனுக்குள் இருந்திருக்கிறேன். நான் சாத்தானின் மண்டலத்தில், இருந்த இயேசுவின் மண்டலத்திற்குள் கடந்து வந்துவிட்டேன். இயேசு ராஜ்ஜியத்தில் நான் உருமாற்றம் அடைந்து மாற்றம் செய்யப்பட்டிருக்கிறேன்.

நான் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் உருமாற்றம் அடைந்திருக்கிறேன். நான் சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையாகியுள்ளேன். ஆவிக்குரிய மரணத்தால் நான் சாத்தானின் ஆதிக்கத்திலிருந்தேன். நித்திய ஜீவன் என்னை விடுதலையாக்கிற்று, நான் சாத்தானின் ராஜ்ஜியத்திலிருந்து கர்த்தராகிய இயேசுவின் ராஜ்ஜியத்தின் மண்டலத்திற்கு மாற்றப்பட்டுள்ளேன்.

**கொலோசியர் 1:13;14**

நான் இருளின் அதிகாரத்திலிருந்து தேவ குமாரனின் ராஜ்ஜியத்திற்கு நான் மாற்றப்பட்டிருக்கிறேன். நான் சாத்தானின் அருகாமையிலிருந்து வெளியேறிவிட்டேன். நான் தேவகுமரன் ஆளுகைக்குள் வந்துவிட்டேன். நான் அந்தகார இருளின் ஆவிகுரிய காரியங்களுக்கு விடுதலை பெற்றேன். நான் சாத்தானின் அதிகார வரம்பிலிருந்து வெளியேறி தேவ குமாரன் உலகிற்குள் கடந்து வந்துவிட்டேன். இயேசு விலை கொடுத்து என்னை அடிமை தனத்திலிருந்து விடுதலையாக்கினார். எப்படி பார்வோன் அதிகாரத்திலிருந்து இஸ்ரவேல் மக்கள்

விடுதலையானாரோ அப்படியே நானும் சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றேன். அவர்கள் செங்கடலை கடந்தார்கள், நானும் என் நினைவுகள் என் சரீரம் என் பொருளாதாரம் எல்லாம் சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து வெளியேறிவிட்டது.

## வெளிப்படுத்தல் 5:10

நான் கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வில் நான் ராஜா. நான் புதிய ஜீவனின் உலகில் ராஜாவாகி ஆட்சி செய்கிறேன். ஆவிக்குரிய மரணம் என்னை சாத்தானுக்கும் அடிமையாக்கியது. நித்திய ஜீவன் அவன் அதிகா வரம்பிலிருந்து என்னை விடுவித்து என்னை ஆட்சியில் அமர்த்தியது. நித்திய ஜீவன் என்னை உயர்த்தியது. அது என்னை ராஜாவாக்கியது. நான் சாத்தானை ஆட்சி செய்கிறேன். நான் நோய்கள் மீது ஆட்சி செய்கிறேன். நான் பாவம் வறுமை மற்றும் சூழ்நிலை மீது ஆட்சி செய்கிறேன். நான் கர்த்தராகிய இயேசு மூலம் வாழ்வில் வெற்றியுடன் ஆட்சி செய்கிறேன்.

## நித்திய ஜீவன் என்னை கிறிஸ்துவுடன் ஐக்கியத்தில் வைக்கிறது | யோவான் 5:11,13

தேவன் எனக்கு நித்திய ஜீவன் தந்திருக்கிறார். அவர் என்னை அதில் இணைத்திருக்கிறார். எனக்குள் இருக்கும் அதே வாழ்வு குமாரனுக்குள்ளும் இருக்கிறது. நான் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறேன், நான் உறுதியாக இருக்கிறேன். நான்அதை அறிவேன். எனக்குள் நித்திய ஜீவன் இருக்கிறது. நான் நித்திய ஜீவன் உடையவன். தேவன் எனக்கு வாழ்வு கொடுத்தார். அந்த வாழ்வு குமாரனுக்குள் வாசம் செய்கிறது. அந்த வாழ்வை நான் சுதந்தரித்தேன்.

## யோவான் 6:53–57

அவர் சரீரத்தை புசித்தேன். அவர் இரத்தத்தை பானம் பன்னினேன். அவர் எனக்காக மரித்தார். நான் நித்திய ஜீவனை சுதந்தரித்தேன். அவர் இரத்தத்தையும் சரீரத்தையும் புசித்தாலும் பானம் பன்னினதால் நான் அவருடனும் அவர் என்னுடனும் இருக்கிறார். நித்திய ஜீவன் என்னை அவரோடு ஐக்கியப்படுத்தியது. அவ்வாழ்வு எங்களை ஒன்றாக்கியது. பிதாவோடு இயேசு ஒன்றாய் இருப்பது போல் நான் இயேசு மூலம் இயேசுவிடம் ஐக்கியப்பட்டு அவர் வாழ்வை நான் பெற்றுக் கொண்டேன். நான் இயேசுவின் வாழ்வை பெற்று நான் அவருடன் ஐக்கியமாய் இருக்கிறேன்.

## யோவான் 14:19;20

அவருக்குள் ஜீவன் இருப்பதுபோல் எனக்குள்ளும் ஜீவன உண்டு. அவருக்குள் வாழ்வு இருப்பது போல் எனக்குள்ளும் அந்த வாழ்வு இருக்கிறது. நானும் இயேசுவும் ஒரே வாழ்வை பகிர்ந்து கொள்கிறோம். பொதுவான வாழ்வை நாங்கள் பகிர்வது மூலம் நான் அவருடன் இணைக்கப்பட்டு ஐக்கியபட்டிருக்கிறேன். நாங்கள் ஒன்றாய் இருக்கிறோம். அவர் ஆவியாய் இருக்கிறார். அவருக்குள் ஜீவன் இருக்கிறது. அவர் ஆவியை நான் பகிர்கிறேன் எனக்கு ஜீவன் இருக்கிறது. நான் அவருடன் ஐக்கியப்பட்டிருக்கிறேன் அவருடன் என்றும் ஐக்கியப்பட்டிருக்கிறேன். நாங்கள் இணைந்தோம் நாங்கள் ஒரே ஆவியை பெற்றிருக்கிறேன்.

**யோவான் 15:4;5**

கிறிஸ்துவின் ஜீவனையே நானும் பெற்றிருக்கிறேன். நானும் இயேசுவும் பொதுவான வாழ்வை பகிர்ந்து கொள்கிறோம். அவருடன் ஐக்கியப்பட்டிருக்கிறேன். நான் தேவகுமாரனுடைய வாழ்வில் ஒன்றாகி அவருக்குள் வாழ்கிறேன். திராட்சை கிளைகளை கொடியுடன் ஐக்கியப்பட்டிருப்பது போல் அவர் தான் திராட்சை செடி நான் கிளை. கொடியில் ஏற்றி கிளைகளுக்கு ஜீவன் பாய்வதுபோல், தேவ வாழ்வு, தெய்வீக சுபாவம் எனக்குள் பாய்கிறது. அவர் மூலமாய் ஜீவன் உண்டாகியிருக்கிறது. அவர் வாழ்வை நானும் பகிர்கிறேன். அவர் வாழ்வு மூலமாய் நான் கனி கொடுக்கிறேன். இதன் மூலம் கிறிஸ்து எனக்குள் வளர்கிறார். கிறிஸ்து எனக்குள் வளர்ந்து கொண்டே இருக்கிறார். நானும் இயேசுவும் ஒன்றாகி வளர்கிறோம். எப்படி கிளைகள் கொடியில் வளர்கிறது போல் அவருக்குள் எல்லாம் நிறைந்திருக்கிறது. அது எனக்குள்ளும் நிறைந்திருக்கிறது. கொடிக்குள் இருப்பது எல்லாம் எனக்குள்ளும் இருக்கிறது. இயேசுவே கொடி நான் கிளை.

கிறிஸ்து எனக்குள் இருக்கிறார். நான் தேவனின் முழுமையில் ஐக்கியப்பட்டிருக்கிறேன். நான் ஒருமைபட்டு இருக்கிறேன். யாருடன் என்றால் அறிவு, ஞானம் படைப்பாளருடன் நான் இவ்வுலகின் பராமரிப்பாளர்களுடன் எல்லாவற்றிற்கும் மேலான தலைவருடன் நான் இணைந்திருக்கிறேன். நான் கிறிஸ்துவின் ஆட்சி மற்றும் அதிகாரத்துடன் ஐக்கியப்

பட்டிருக்கிறேன்.

என்னில் உள்ள தேவனின் வாழ்வு என் அறிவுத்திறனை தெளிவுபடுத்துகிறது மற்றும் என் ஆளுமையை மேம்படுத்துகிறது.

## யோவான் 1:4; 8:12

தேவனின் வாழ்வு எனக்கு வெளிச்சம் தருகிறது. அந்த வாழ்வு என அறிவுக்கு வெளிச்சம் தருகிறது. என் மனதின் ஆவியிலிந்து ஒளி ஊடுருவுகிறது மற்றும் அது இருளின் உணர்வுக்குள் அறிவிற்குள் என்னை சேர்ப்பதில்லை. என் மனம் ஆவியால் போதிக்கப்படுகிறது. ஆவி இயக்கப்பட்டு என் மனம் ஆவியாய் இருக்கிறது. அது ஆதிக்கம் செலுத்துகிறது. என்னுள் ஜீவன் இருக்கிறது. தேவனின் வாழ்வு ஒளியின் வெள்ளம் என் உள்ளத்தை நிரப்புகிறது. நான் என் மன இருளில் நடக்கவில்லை. என் மனம் மற்றும் ஆளுமை எனக்குள் இருக்கும் தேவனின் ஜீவனால் விடுவிக்கப்படுகிறது. அந்த வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வு. கிறிஸ்துவின் ஜீவன் என் ஆன்மாவை மலர செய்கிறது. அவர் நிறைவுடன் ஆளுமையுடன் மலர்கிறது. அவர் வாழ்வு எனக்குள் வளர்கிறது நானும் வளர்கிறேன். அவர் ஞானம் எனக்குள் அவர் வாழ்வு என்னுள் இருப்பதால். அவரது வாழ்க்கை புரிதல் எனக்குள் தனிப்பட்ட அதிகாரம் தருகிறது. இயேசு எனக்குள் உருவாகிறார். நித்திய ஜீவன் என் அறிவாற்றலை மேம்படுத்துகிறது. அந்த ஜீவன் அறிவையும் ஆளுமையும் உயர்த்துகிறது. நான் இருளில் நடப்பதில்லை இயேசு கிறிஸ்துவின் ஞானம் என்

காரியங்களை வழி நடத்தும்.

என்னில் உள்ள தேவனின் வாழ்வு பாவம் நோய் மற்றும் சாத்தானை அழிக்கிறது.

### I யோவன் 3:9

என்னில் தேவ சிந்தை உள்ளது. அந்த தெய்வீக ஜீவன் என்னுள் இருக்கிறது. என்னை கட்டுப்படுத்துகிறது நான என் பிதாவின் சிந்தை மற்றும் சந்ததியை சுமக்கிறேன். அந்த ஜீவன் பாவத்தை வெல்லும். நான் பாவம் செய்வதில்லை நான் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுபட்டுள்ளேன். தேவனின் ஜீவன் எனக்குள் இருக்கிறது அது என்னை கட்டுப்படுத்துகிறது.

### I யோவன் 5:4

நான் தேவனால் பிறந்தவன் அவர் ஜீவனோடு நான் இருக்கிறேன். நான் உலகை வென்றவன். நான் உலகத்தின் எஜமான், நான்அதிகம் வென்றவன். தேவனின் ஜீவன் எனக்குள் இருப்பதால் வெளிய உள்ள உலகை நான் வென்றவன். உலகில் உள்ள பாவம் நோய் மற்றும் சாத்தானை நான் தொடர்ந்து வெற்றி பெறுகிறேன. நான் தொடர்ந்து வெற்றி பெற்றுக்கொண்டே இருக்கிறேன். நான் தேவனால் பிறந்தவன் தேவனின் ஜீவன் எனக்குள் இருக்கிறது.

### I யோவான் 5:18

நான் தேவனிடத்தில் இறந்து புது வாழ்வு பெற்றேன். நான் தேவனால் பெற்றெடுக்கபட்டிருக்கிறேன். தேவ குமாரன்

மூலமாய் நான் பெற்ற தெய்வீக வாழ்வு என்னை பாதுகாக்கிறது. சாத்தான் என்னை கட்டுப்படுத்த முடியாது. அவன் என்னை கட்டி போட முடியாது. என்னில் உள்ள தேவனுடைய ஜீவன் பாவம், வியாதி, சாத்தானை விரட்டுகிறது. அது என்னிடமிருந்து வெளிப்பட்டு என்னை மகிமையாய் சூழுந்திருக்கிறது. இது ஒரு காந்த சக்தி புலம் போல் பிசாசையும், நோயையும், பாவத்தையும் விரட்டி அடித்து தேவனுடைய ஜீவன் என்னில் இருந்து

தேவனுடைய ஆவியானவர் எனக்குள் வாசமாய் இருக்கிறார். அவர் தேவனுடைய ஜீவனை எடுத்து எனக்குள் முழுவதுமாக எல்லா நோய்களுக்கும் விலக்கி புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது. தேவனுடைய வாழ்வு என்பது யோகோவா ராப்பாவில் இருக்கிறது. அவர் தெய்வீக பரிகாரி என்னை குணப்படுத்தும் தேவனின் ஜீவன் என் சரீரத்தில் செயல்பட்டு நோய்களை கொன்று விரட்டுகிறது. தேவ ஜீவன் என் சரீரத்தில் உள்ள நோய்களை அப்புறப்படுத்துகிறது. தேவ ஆவியானவர் தேவனுடைய ஜீவனை ஆத்துமாவிற்குள், சரீரத்திற்குள் வழங்குகிறார். என் முழுமைக்கும் வலிமையையும் உயிர் சக்தியையும் தருகிறார். கர்த்தருடைய ஆவியானவர் வெளியில் இருந்து என்னை நிரப்பி புதிய வாழ்வை என் சரீரத்திற்கு கொடுக்கிறார்.

## ரோமர் 5:10

நான் இரட்சிக்கப்பட்டேன், குணமாக்கப்பட்டேன், பாதுகாக்கப்பட்டேன், விடுவிக்கப்பட்டேன் மற்றும்

என்னில் உள்ள கிறிஸ்துவின் ஜீவனாகி ஓடுகின்ற இந்த வாழ்வு பாவத்தின் நோயின் ஆதிக்கத்திலிருந்து என்னை விடுவித்தது. சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கிறது தேவனின் ஜீவன். பாவம் நோய் சாத்தானை விரட்டி அடிக்கிறது. அவர் ஜீவனால் நான் பாதுகாக்கப்படுகிறேன். நான் தினந்தோறும் பாவம் நோய் ஆதிக்கத்திலிருந்து தேவனின் உயிர்த்தெழுந்த வல்லமை என்னை விடுவிக்கிறது அது எனக்குள் இருக்கிறது.

## நித்திய ஜீவன் எனக்குள் அதிகரித்து வளர்ந்து வருகிறது யோவான் 6:63, 68

அவருடைய வார்த்தைகள் இப்பொழுது எனக்கு மேலும் மேலும் வாழ்வளிக்கிறது. அவர் வார்த்தைகள் உயிர் உள்ளவைகள் அவருடைய வார்த்தைகள் எனக்குள் ஊடுருவி என் வாழ்வுக்குள் சேகரிக்கப்படுகிறது. எனக்குள் வரும் வார்த்தைகள் இருந்து ஜீவன் வெளிப்பட்டு நான் ஜீவ வாழ்வில் நிரப்பப்படுகிறேன்.

## எபிரேயர் 4:12

தேவனின் வார்த்தை ஆற்றல் மிக்கதும் ஜீவன் உள்ளதுமாய் இருக்கிறது. அதில் வாழ்வும் வல்லமையும் நிறைந்திருக்கிறது. தேவ வார்த்தை தேவ வாழ்வால் நிறைந்திருக்கிறது. தேவ வார்தயதை தேவ வாழ்வை அதிக அதிகமாய் எனக்குள் சேகரிக்கப்படுகிறது. அது வளர்கிறது, என்னை உயர்த்துகிறது, தேவ வார்த்தை எனக்குள் துளையிட்டு ஊடுருவி எனக்குள் ஜீவ வாழ்வை

நிரப்புகிறது. எனக்குள் ஜீவ வாழ்வை நிரப்புகிறது. எனக்குள் முழுவதுமாக ஊடுருவி மையப் பகுதியில் ஆட்கொண்டு என்னை நிரப்புகிறது.

## கலாத்தியர் 6:8

தேவ வார்த்தையை எனக்குள் விதைக்கும் போது ஜீவ வாழ்வை நான் அதிகம் அதிகமாய் அறுவடை செய்கிறேன். தேவ வார்த்தையில் ஆற்றலும் தேவ வாழ்வும் கொண்டுள்ளது. நான் அந்த வாழ்வின் ஆற்றலை கொண்டுள்ளேன். அது எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டு அந்த அளவில் கொந்தளிக்கிறது. தேவ வார்த்தை முழுமையாக எனக்குள் மையத்தில் இருந்து ஊடுருவி அங்கே ஜீவன் வெடித்து சிதருகிறது. தேவ வாழ்வு என்னிலிருந்து வெளிப்படுகிறது.

## யோவான் 10:10

எனக்குள் நித்திய ஜீவன் இருக்கிறது. அது முழு அளவில் நிரம்பி வழிகிறது. தேவ வாழ்வை உள்ளடக்க மேலும் மேலும் என் திறனை நான் விரிவுபடுத்துகிறேன். என்னுள் ஜீவன் நிரம்பி வழிகிறது. எனக்குள் ஜீவன் அதிக அதிகமாய் இருக்கிறது. நான் அதை அதிகரிக்கும் வகையில் என் வாழ்வு உள்ளது. அது எனக்குள் அலையை போல் எழும்புகிறது. இது என் உடலையும் மனதையும் மூழ்கடித்து என் ஆன்மாவிற்கு மறு சீரமைப்பபையும் சக்தியையும் கொண்டு வருகிறது. பரலோக வாழ்வு எனக்குள் நதி போல் பாய்கிறது. தேவனை போன்ற ஜீவ நதி எனக்குள் பாய்கிறது. அற்புத

வாழ்வு சுக வாழ்வு காப்பது எல்லாம் எனக்குள் இருக்கிறது. ஆவியினாலும் வார்த்தையினாலும் அது எனக்குள் அதிகரித்து கொண்டு வருகிறது.

## என் நோக்கம் என் தந்தையின் நோக்கம் | யோவான் 3:8 எபிரேயர் 2:10

பிசாசின் கிரியைகளை அழிக்க இயேசு வெளிப்பட்டது போல நானும் வெளிப்பட்டிருக்கிறேன். பலரை குமார்களாக மகிமைக்குள் கொண்டு வர இயேசு வெளிப்பட்டது போல நானும் வெளிப்பட்டிருக்கிறேன். அவரும் பிதாவும் ஒன்றாய் இருப்பது போல நாமும் ஒன்றாய் இருக்கும்படி என்று பிதாவிடம் கேட்டு அவர் என்னிலும் என்னிடம் ஒன்றாகிவிட்டார். நம் பிதாவாகிய தேவன், நம்மை குமாரர்களாக அழைப்பதன் மூலமும் நம்மை கிறிஸ்துவின் மூலமும் அவரின் அன்பின் பண்புகளை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. உலகத்திற்கு தேவன் யார் என்று தெரியாததினால் நாம் தேவனின் புத்திரர்கள் என்று உலகம் அறியாதிருக்கிறது.

நாம் உண்மையிலே தேவ பிள்ளைகள் தேவனின் புத்திர்கள். இயேசு வரும் போது நாம் எப்படி இருப்போம் என்று நமக்கு சரியாக தெரியவில்லை. அவர் வருகிறார் அவரை போல் நாமும் இருப்போம். ஏனென்றால் அவர் உண்மையில் இருக்கும் எல்லாவற்றையும் நாமும் பார்ப்போம். இந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. நாம் நம்மை சுத்திகரிப்போம் அவரைபோல் மாறுவோம் அவர் பரிசுத்தத்தில் நாமும் அவரைப் போல்

காணப்படுவோம்.

ஆமேன்! அப்பா நான் நீங்கள் சொல்லும் அனைத்தையும் உளமாற ஏற்க்கிறேன். நான் யார் நான் என்னவாய் இருக்கிறேன். என்னால் என்ன செய்ய முடியும். உமக்குள் அப்படியே ஆகட்டும்.

## குமாரத்துவத்தைப் பற்றிய வேதக் குறிப்புகள்

யோவான் 1:12

மத். 5:9

ரோமர் 8:19

ரோம். 8:14-17

கால 3:26

ரோமர் 9:26

எப். 1:5

கலா 4:5-7

எபெ. 2:10

பிலிப். 2:15

வெளி 21:7

யோவான் 3:1,2

## நகர கொண்டாட்ட கூடுகை

இந்த அமைப்பின் பணியானது கிறிஸ்துவின் சரீரம் தேவனுடைய குமாரனைப் பற்றிய அறிவைப் பற்றிய அதிக வெளிப்பாட்டிற்கு வர உதவுவதில் கவனம் செலுத்துகிறது.

மின்னஞ்சல் : celebration.mission@gmail.com
இணையதளத்தில் அதிக வாழ்க்கை தேடலுக்கு
இணையதளம் www.celebrationcity.net

